★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 8 ஜுல்கஃ 14 இதழ் 192

யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-8-83

## தமிழக சபாநாயகர் 'அமிரு'க்கு விருந்துபசாரம்!

### சம்பந்தன், 'நவம்' கலந்துகொண்டனர்

(சென்னை)

இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு தமிழக சபாநாயகர் திரு. ராஜாராம், மேல்சபைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் ஆகியோர் நேற்று விருந்தளித்துக் கௌரவித்தனர்.

இவ்விருந்துபசாரத்தில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. வி. என். நவரத்தினம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தற்போது சென்னையிலுள்ள திரு. அமிர்தலிங்கம் இலங்கை விவகாரம் குறித்து தமிழகத்தின் பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்து விவாதித்துவருகிறார்.

இதேவேளை இலங்கையிலிருந்து வந்துள்ள மற்றுமிரு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோர் காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறனைச் சந்தித்து உரையாடினர். இச்சந்திப்பில் அவுஸ்திரேலிய ஈழத் தமிழர் ஒன்றியத் தலைவர் திரு. துரைசிங்கமும் கலந்துகொண்டார்.

(கு)

# "தனிநாடுகோரும் எந்தக் கட்சியுடனும் பேச்சு இல்லை!"

## வானொலி, தொலைக்காட்சியில் ஜனாதிபதி

(கொழும்பு)

தனிநாடுகோரி இந்த நாட்டைக் கூறுபோட எத்தனிக்கும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்று தீர்மானித்துவிட்டதாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி, வானொலி மூலம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற சகல சம்பவங்களையும் விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர் உரை இடம்பெற்றது.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:

''1977ல் நாம் தேர்தலுக்கு நின்றபோது தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கு சில வழிமுறைகளை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பார்த்தசாரதி-கருணாநிதி சென்னையில் இன்றுசந்திப்பு!

சென்னை

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் தூதுவராக இலங்கைக்கு செல்லும் திரு. ஜி. பார்த்தசாரதி இன்று புதன்கிழமை தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்.

புதுடில்லியிலிருந்து கொழும்பு செல்லும் வழியில் தமிழக தலைவர்களைச் சந்தித்து உரையாடவரும் திரு. பார்த்தசாரதியுடன் பேசுவதற்காக அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தமது சந்திப்புப்பற்றி உறுதிப்படுத்தியதாக திரு. கருணாநிதி தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்தை மீண்டும் சென்னையில் சந்திக்கப்போவதாகவும் தெரிவித்த திரு. கருணாநிதி, இலங்கைநிலை குறித்து அறிய அங்கு செல்லும் பாரத நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுடன் வழக்கறிஞர் நீதிபதிகள் குழுவொன்றும் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (கு)

## காணமல் போனவர்கள்பற்றி விபரம் அறிய ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களின் போது காணமல் போனவர்கள் பற்றிய விபரங்களை அறிந்து உறவினர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் பணியாற்றுவதற்கென யாழ். செயலகத்தில் இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காணமல்போன உறவினர்கள் பற்றிய முழுவிபரங்களையும் யாழ். செயலகத்திலுள்ள இவ்வதிகாரிகளிடம் தெரிவிக்கப்படும் பட்சத்தில் காணமல் போனவர்களின் நிலைபற்றி அவர்கள் விபரம் அறிந்து தெரிவிப்பார்கள்.

காணமல் போனவர், இருந்த இடம், தொழில் மற்றும் உடல் அங்க அடையாங்கள் பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்படவேண்டும்.

### செய்தித் தணிக்கை

கடந்த மாதம் 20-ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவுத் திட்டம் உதவி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று உலக உணவுத்திட்டம் கலவரங்களினால் பாதிக்கப்பட்டமக்களுக்கு ஒரு லட்சத்து 55,000 டாலர் பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்கவுள்ளது.

290 மெட்றிக் தொன் கோதுமை மாவும், 19 மெட்றிக்தொன் கறிச்சரக்கு வகைகளும் இதனுள் அடங்கும்.

முகாம்களிலுள்ள மக்களுக்கும், முகாம்களுக்கு வெளியிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இவ்உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

(வெ)

## பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!

### 3 பேர் பலி!; பலருக்குக்காயம்

இஸ்லாமாபாத், ஆக. 23

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியைஎதிர்த்துதொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள்நடைபெற்று வருகிறது.

இராணுவ ஆட்சியை எதிர்த்து சிந்து மாகாணத்தில் நேற்று மிகப்பெரிய ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. இதனையடுத்து சிந்து மாகாண வங்கிகளிலிருந்த பணம் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இத்தகைய ஆர்ப்பாட்டங்களிலீடுபட்டவர்களைக் கலைப்பதற்காகப் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது 3 பேர் பலியானர்கள். பலர் காயமடைந்தனர்.

கல்லெறியும் கும்பலைக் கலைப்பதற்காகப் பொலிசார் கண்ணீர்ப் புகைப்பிரயோகமும் மேற்கொண்டனர். (வெ)

## 12 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட 12 மாவட்டங்களில் இன்று இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை அமுலில் இருக்கும்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, பதுளை, நுவரலியா, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய 12 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மேற்குறித்த நேரத்தில் அமுலில் இருக்கும். (சூ)

## புனர்வாழ்வு நிதி கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் முன்னர் இடம்பெற்றவன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் 50,000 ரூபாவை அவரின் செயலாளர் திரு. பொ. நெல்லிநாதன் மூலம் திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தனுக்குஅனுப்பிவைத்துள்ளார்.

இந்நிதி எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்டது. இந்நிதிக்கு மேலும் பணம் சேகரிக்கப்பட்டு திருகோணமலை எம். பி.க்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## 334இந்திய வம்சாவளிமக்கள் தூத்துக்குடி வந்துசேர்ந்தனர்

(சென்னை)

கொழும்பிலுள்ள அகதிகள் முகாமில் 12 நாட்கள் தங்கியிருந்த 334 இந்திய வம்சாவளி மக்கள் இந்தியப் பயணிகள் கப்பலான 'பாரத் சீமா' மூலம் நேற்று முன்தினம் தூத்துக்குடி போய்ச் சேர்ந்தனர்.

இவர்களை அங்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் உட்படப் பலர் வரவேற்றனர். இவர்களில் உறவினர்களிடம் செல்ல விரும்புபவர்கள் அங்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். ஏனையவர்கள் மண்டபத்திலும், திருச்சியிலும் தங்க ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

### திருநிலைப்படுத்தல் அழைப்பு

புலோலியைச் சேர்ந்த எல். எம். யோசேப் தம்பதிகளின் புதல்வர் அருட் சகோதரர் அலோசியஸ் றேய், அ. ம. தி. இம்மாதம் 27-ம் திகதி காலை 7-15 மணிக்கு புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார் 8325

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கடைகள் தொழிற்சாலை கட்டுவதற்குச் சிறந்த காணி ஒன்றரைப் பரப்பு திருநெல்வேலி சந்தியில் உள்ளது. தொடர்பு கொள்க முருகேசு 73/1, பலாலி வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம். 8297

மைனர் கார் EL O. H. V. விற்பனைக்குண்டு. வை. வித்தியானந்தன் 'யோக பவனம்' இந்துக்கல்லூரி வீதி உரும்பிராய். 8322

சங்கானை சந்தைக்கு அருகாமையில் வீட்டுடன் 3 பரப்பு காணி சகல வசதியுடனும் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: M. S. ஐயாத்துரை மார்க்கட் சங்கானை. 8321

மானிப்பாய் நகரசபை எல்லைக்குள் வீடுகட்டுவதற்கு அல்லது தொழிற்சாலை அமைப்பதற்கு தகுதியான 18+3=21 பரப்புகாணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பி. டேவிட் மே/பா விஞயகமூர்த்தி சந்திரன் சந்தி, கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். 8331

## விற்பனைக்கு

சகல வசதிகளுமுடைய 3 பரப்பு காணியுடன் வீடு பருத்தித்துறை வல்லிபுரப்பரியாரியாரின்ஒழுங்கையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ப. சோதிமுத்து, அரசடி வீதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 8328

நாவற்குளி கேரதீவு வீதியில் புகையிரதநிலையத்திற்கு அண்மையில் 6½ பரப்பு வீடுகட்டக் கூடிய காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. ஜெயசுந்தரகுமார் குறுக்குத்தெரு நீர்வேலி வடக்கு. 8326

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 1000 - 2000 சதுர அடிக்கிடையில் மின்சார வசதியுடன் அச்சகம் அமைப்பதற்கேற்ற கட்டிடம்/வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8319 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 8319

## FOR SALE

Residential property at Thirunelvely. Vacant land in good surroundings, close to market and Campus, about 100 yards interior from Palaly Road. Contact Iyer, Surveyor 16, KadaichamyRoad Neeraviady, Jaffna Tele phone No.24416. 8335

Pure Bread Alsation Pups for sale Each Rs. 1000/- Contact Veterinary Surgeon, Kilinochchi. 8336

HIFI 2 in 1, Records (English) LP and EP, Disco unit and lights, Dinner set, Washing Machine, T. V., Toaster, and manymore things, car for sale. Audi 80 LS, 11 Sri 4078 U. K. used, Leaving the country. 22, Somasundaram Avenue, Chundikuli. 8337

### இந்தியாவின் மலேரியாத்தடுப்பு மருந்துவகைகள்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. சத்வால் கலவரங்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்தியாவினுல் வழங்கப்பட்ட மலேரியாத் தடுப்பு மருந்துவகைகளை சமூகசேவைத் திணைக்களத் திடம் கையளிப்பர்.

---

பாதிக்கப்பட்ட மாணவர்களின்
நலன் கருதி புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்

# JASE INSTITUTES

TRIMMER HALL PRIMISE

21/6, வேம்படி ரேட் — யாழ்ப்பாணம்.

- C. E. I. Part 1 1984 மே பரீட்சைக்கு (LONDON ENGINEERING COURSE) க. பொ. த. உயர்தரம் 2 பாடங்களுடன்
- CITY AND GUILDS TELECOMMUNICATIONS TECHNICIAN COURSE OR
- ELECTRICAL ENGINEERING TECHNICIANS COURSE க. பொ. த. சாதாரண தரத்துடன்

27-08-83 முதல் பதிவுசெய்யலாம்.

குறிப்பு: நடைபெறுகின்ற ஏனைய வகுப்புக்கள் யாவும் 27-8-83 தொடக்கம் வழமையாக நடைபெறும். (8309)

---

நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபையாரின்

## விசேஷ அறிவித்தல்

### நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் திருக்குட முழுக்கு விழா

அன்னதான சபை தமது அன்னதானப் பணியை இவ்விழாவில் வழமை போல் சிறந்த முறையில் அம்பிகை அடியார்களுக்குச் செய்ய முன்வந்துள்ளது என்பதனைப் பணிவுடன் அறியத்தருகின்றது.

அன்னதானம் 26-08-1983 தொடக்கம் 28-08-1983 வரை (வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில்) நடைபெறும்.

முக்கிய குறிப்பு:-

28-08-1983 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் மகேஸ்வரபூசை (அன்னதானம்) ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் பொறுப்பில் அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறும்.

க. வே. பரமலிங்கம் ஜே. பி.,
செயலாளர்,
நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி.
அன்னதானசபை.

நயினுதீவு.
1983-08-22. 8330

---

வெளியூர்சார், அந்நிய நிதி நிறுவனங்களில் குறைந்த வட்டிக்குப் பணத்தை முடக்கி அதனுல் இன்றுவரை பூரண இலாப வருவாயை இழந்தது மட்டுமன்றி, தற்போதைய உங்கள் உடனடித் தேவைகட்குப் பணத்தை மீளப்பெற முடியாதவாறு சிரமங்களுக் குள்ளாகியுள்ளீர்களா?

அப்படியாயின்

உங்கள் பணவைப்புகட்கு
உறவினர் போன்ற உற்றதுணை

இலங்கையிலேயே

அதீத வட்டியான **36%** வருவாய் வழங்கும் தனி நிறுவனமான

# தமிழர் நிதியம்

நிதி நிறுவனமே

தமிழினப்பற்று, நம்பிக்கை, நாணயம்,
நன்மதிப்பு; பாதுகாப்பு, உத்தரவாதம்,
சேமிப்பு ஊக்கம், அவசர உதவி
என்பவற்றின் சின்னம் →

**THAMIL FUNDS AND FINANCE LIMITED**

140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.
140 NAVALAR ROAD, JAFFNA, SRI LANKA. ☎ 437

உங்கள் வருங்காலத்திற்குச் சேமிப்பே
உறுதுணை

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகு:
19-5-1950

விண்ணுலகு:
24-7-1983

**அமரர் கனகரத்தினம் கிருஷ்ணனந்தம்**
(உரிமையாளர் ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், நல்லூர்)

எம்மை பாசத்தால் அன்பால், பண்பால் வாழ்வித்து, வளமாக்கி இதயம் நிறைந்த அன்புடன் மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து நீ சென்றாலும் நீ செய்த அன்புச் செயல்களெல்லாம் எங்கள் கண்முன்னே ஒளியாய் திகழ்ந்து கொண்டே இருக்கின்றன. எங்கள் உள்ளமெல்லாம் குடிகொண்டுவிட்ட ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லைக்கந்தனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகன், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள், உறவினர்கள்.
2, கந்தபுராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 8313

# சமூகசேவைக்கு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள பல்வேறு திணைக்கள கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்கள்சமூகசேவையாக தாங்கள் செய்துவந்த தொழில்களை இங்கும் ஆற்றுவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் சில பகுதிகளில், உத்தியோகத்தர்கள் பற்ருக்குறையால் கடந்த காலங்களில் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் குறைபட்டுவந்தனர்.

குறிப்பாகப்யாழ். குடிவரவு குடியகல்வு திணைக்களம், பதிவாளர் பகுதி (பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறும் பகுதி), அடையாள அட்டைப்பகுதி ஆகியவற்றில் உத்தியோகத்தர்கள் குறைவாகவே இருப்பதாகவும், பொது மக்களின் நலன்கருதி மேலதிக நேரங்களில்கூட இவர்கள் கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்றும் கூட்டுத்தாபனங்கள், தனியார் துறைகளிலும் உத்தியோகத்தர்கள் பற்ருக்குறையாக இருப்பதாகவும் விளம்பரப்படுத்தப்படுகிறது.

அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள சகல துறை ஊழியர்களும் சமூகசேவையாகவோ குறைந்த வருமானத்துடனே கடமையாற்ற - தொழில்புரிவதனுல் வேலைப்பழு நீங்கவும், பொதுமக்கள் பிரச்னைகள் தீரவும் வழிபிறக்கும். அத்துடன், அகதிகளாக வந்தவர்களும் வீணே காலத்தைக் கழிக்காமல் தங்கள் வாழ்க்கையைக் கொண்டுசெலுத்தலாம் என்றும் நம்பப்படுகிறது. (மா)

## ஐரோப்பிய உதவி

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சத்து 65,000 டாலர்களை ஐரோப்பியபொருளாதார சமூகம் வழங்கவுள்ளது.


சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30
ஜெய்சங்கர்
துணிவேதுணை
புதியபிரதி - கலர்

லிடோ (யாழ். நகர்)
10-30, 1-30, 3-30
Sean Connery 007
YOU LIVE ONLY TWICE
(Colour - Scope)

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
சிவாஜி — விஜயா
விஸ்வரூபம்
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.,
சரோஜாதேவி, நாகேஷ்
பணத்தோட்டம்

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00
சிவாஜி - விஜயா
ராமன் எத்தனை ராமனடி



## யாழ்ப்பாண அக்கடமி

புதுதவணை

ஆரம்பம்: 29-8-83.

1. க. பொ. த. உயர்தர ஆகஸ்ட் 84ம் ஆண்டு வகுப்புகள் மேற்கூறப்பட்ட திகதியில் ஆரம்பமாகும்.
2. ஆகஸ்ட் 83ம் ஆண்டு பரீட்சை தோற்றவிருக்கும் எமது மாணவர்களுக்குஇலவச கேள்வி-பதில் வகுப்புகள் நடத்தும் நோக்கம் இருப்பதனுல் பங்குபெற விரும்புவோர் தவருது 29-8-83ம் திகதி சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.
3. இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து இப்போ யாழ்ப்பாணத்திலிருப்போரை மனதில் கொண்டு க. பொ. த. உயர்தர (விஞ்ஞான) ஆகஸ்ட் 1985ம் ஆண்டு பரீட்சைக்குரிய வகுப்புகளை புதிதாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுகின்றது. இதில் சேரவிரும்புவோர் அக்கடமிகாரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்

தொலைபேசி எண்: 22617

376, பிரதான வீதி,

சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

8329


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தியாகராஜா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்.

—இறந்தவர்

கந்தையா இரத்தினசிங்கம் பெண் அன்னலெட்சுமி 408, கே. கே. எஸ். ரேட்டு, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

மரணசாதன)
நியாயாதிக்கம்)
இல. தத்துவம் / 3706

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் ஆதனத்தை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்,

1983ம் ஆண்டு ஆடி மாதம் 22ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

தா. குலஞானம்,
பதிவாளர்.

டபிள்யு. எஸ்,
செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி.

8280

# இன்றைய பலன்

ஆவணி 8ம் திகதி
புதன்கிழமை
(24—8—83)

மேடம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும் இன்று சும்மா இருப்பதே உத்தமம். சூழ்ச்சிவலை பின்னும்.

இடபம்: வாகனவிருத்திக்கு இடமுண்டு முன்னேற்ற வாழ்விற்கும் இடமுண்டு. தாய்வழி தனவரவுக்கும் இடமுண்டு பொருளாதார நிலையில் அபிவிருத்தி காணப்படும்.

மிதுனம்: கனிவான பேச்சு காந்தம் போல் பார்வை கன்னியர் உறவும் காதலர் சந்திப்புக்கும்இடமுண்டு.புதியபாதையும் புத்திரர்புகழும் கிடைக்கும் வழிபாட்டில் ஆர்வமுண்டு

கடகம்: தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும் நண்பர்களே காலைவாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம் எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பர்.

சிங்கம்: இன்பத்தின் அழைப்பு தாராளமாகக் கிடைக்கும் காதலர்கள் வாழ்க்கையில் தடைக்கல் விலகிநல்ல முடிவு ஏற்படும் பெற்ருேர் ஆதரவும் உண்டு.

கன்னி: நினைத்தது நடக்காது நெடும்பயணம் வேண்டாம். அவசரக்கோலம் தலைகாட்டும் அதன்வழியால் துன்பங்கள் தொடரும், ஆசாரக் குறைவுக்கும் இடமுண்டு.

துலாம்: இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடுவீர்கள் உயர்வட்டத்தின் அன்பும் அவசியம் கிடைக்கும். பதவி உயர்வும் தொழில் விருத்தியும் உண்டு.

விருச்சிகம்: கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன் மூலம் புதிய பாதை பிறக்கும் வெளியிடத்துத் தொடர்புகளினுல் வெற்றி உண்டு. தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றமுண்டு.

தனு: நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். சுற்ருடலில் மதிப்பு உயரும் பெரிய மனிதரின் ஆதரவும் அறிஞர்களின் சந்திப்பும் நிக

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் புனர்வாழ்வுநிதியம்-1983

யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வேண்டுகோளிற்கிணங்க அகதிகளின் நிவாரணத்திற்கென அளிக்கப்படும் நிதிகள் யாவற்றையும், ஒன்று திரட்டவென ஏற்படுத்தப்பட்ட ''அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983''ன் முகாமைச்சபை எல்லாப் பொதுநலன் கருதும் மக்களிடமிருந்தும், நிவாரணம், புனர்வாழ்வு ஆகியவற்றிற்காக நிதி உதவுமாறு வேண்டுகிறது. நிதி ''அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983'' வை, எம். சி. ஏ. கட்டிடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் கணக்கிலக்கம் 21374 சீ யிற்கோ அல்லது யாழ்ப்பாணம் அட்டன் நாஷனல் வங்கியின் கணக்கிலக்கம் 2986 ற்கோ வரவு வைக்க அனுப்பப்படலாம். இவை கிடைக்கப் பெற்றமை பற்றிப் பொருளாளர் அறியத்தருவார்.

| டாக்டர் | கே. வி. | ஜே. எம். |
|---|---|---|
| யோகு பசுபதி | நவரட்னம் | சபாரட்னம் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர். |

8333

## அகதிகள் புனர்வாழ்வுநிதியம்-1983
## பாடசாலை அனுமதி

அண்மையில் ஏற்பட்ட கலவரத்தினுல் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களை இம்மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சேர்வதற்கு ஏற்கனவே விண்ணப்பிக்காவிட்டால், 31-08-83க்கு முன் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு பின்வரும் தகவல்களுடன் விண்ணப்பிக்கவும்.

பெயர் —
பெற்ருேர் / பாதுகாவலர் —
வகுப்பு —
முன்பு படித்த பாடசாலை —
தற்போதைய வதிவிட விலாசம் —

| யோகு பசுபதி | கே.வி.நவரட்னம் | ஜே.எம். சபாரட்னம் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர். |

8332


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சிட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சிட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.
குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.
05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!
CROSS TRAVEL SERVICES (PVT)LTD.
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair
Stage II Modern Market Ist Floor
BUSSTAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## மணிவாக்கு

முட்டாள்களின் மத்தியில் ஆளுபவனின் கூச்சலை விட அறிவாளிகளின் வார்த்தைகள் அமைதியுடன் அதிகம் கேட்கப்படுகின்றன.

—பைபிள்

# நமது நோக்கு

## நீண்ட பயணத்தில் நிதானம் நலம்தரும்

பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பொறுமை இழந்துபயனற்ற சிந்தனைகளிலும் செயல்களிலும் விருப்பங் கொள்வது சகஜம்.

ஆனால் உரிமைப்போரில் நாமின்று ஒருமுக்கிய கட்டத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறோம்.

இரண்டாவது உலகயுத்தத்தில் ஜெர்மனியிலிருந்து ஆங்கிலேயருக்கெதிராக வானொலிப் பிரசாரஞ் செய்த 'ஹோஹோ பிரபு' என்ற புனைபெயர் கொண்டவர் ஒரு ஆங்கிலேயர்; தன் நாட்டுக்கு துரோகமாக அடிக்கடி கூறிய கருத்து. ''இங்கிலிஷ்காரன் கடைசி பிரெஞ்சு யுத்த வீரன் மடியும் வரைக்குமே சண்டை செய்வான்''

1940ல் உலகத்தை ராணுவ அதிர்ச்சி வெற்றியால்நடுங்கவைத்த ஜெர்மனியே வெற்றியடையுமென்ற நம்பிக்கை பரவலாக இருந்தபோது நிதானம் இழந்தபலர் பொறுமையற்று ஜெர்மனிக்குவெற்றிவாகை சூட்டினர்.

இன்று எங்கள் நாட்டில் ஒரு பெரும்போரோ அல்லது உள்நாட்டுப்போரோ நடந்ததில்லை. போருக்கு விவாகத்தைப்போல் இருகுதிகள் தேவை; எனவே பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே; வேறு உபகதைகளுக்கு இன்று நேரமில்லை.

உண்மை இறுதியில் வெளிவரும் என்ற நம்பிக்கையில் நாம் வதந்திகளை அவசரப்பட்டு நம்புவது ஆபத்தானது.

தமிழ் மக்கள் பக்கத்தில் வரவேண்டு குறிக்கப்பட வேண்டிய கணக்கில் யூலை 5ல் கொழும்பில் ஆரம்பமான மாபெரும் கலவரத்தில் இன்று வரைக்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்கள உயிரும் சேதமடையவில்லை. கொழும்பு சிறைச்சாலையில் கொல்லப்பட்ட 52 தமிழர்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில ஏதும் நடந்ததா? மூன்று தமிழ் கைதிகளே கொல்லப்பட்டனர் என்பதே விடை.

நாமெல்லாம் மகாத்மா காந்தியின் அஹிம்சைப் போராட்டத்தை மதித்துப் பேசுகின்றோம்; இடைக்கிடை அதன்வழியில் செயற்பட்டுமிருக்கின்றோம்.

இன்று எத்தனை தமிழர்கள் உயிரிழந்தனர்? தொகை இன்னும் முற்றாக மதிப்பெடுக்கப்படவில்லை. அண்மையில் ஒரு கொழும்பு ஹோட்டலில் இரண்டு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. உண்மையில் காணாமற்போனவர்கள் சிலராவது உயிருடன் இருக்கலாம்.

அதெவ்வாறாலும், உயிரிழந்தவர்கள் என்று நம்பிக்கையாக நாமறிந்தவர்கள் சுதந்திர பயணத்திற்குத் தம்மை அர்ப்பணித்த தியாகச் சுடர்களாகக் கணக்கெடுக்கவேண்டும். நாம் கொல்லாமல், கொல்லப்பட்டு உயிரிழந்தோம் என்பது நீதித் தராசில் எங்கள் பக்கம் பாரமானதாகப் பதியும்; இது நிச்சயம்.

எல்லாவித தானங்களிலும் நிதானம் பெரிது. இன்று நாம் பேசுவதெல்லாம், செய்வதெல்லாம் நன்கு ஆராய்ந்து நடத்தப்படவேண்டும். நீதியை, அறத்தை அறிந்தவர்களின் அனுதாபத்தை நாம் பெற்று வருவதால் எங்கள் பலம் தியாகத்தால் பன்மடங்கு பெருக வேண்டும்.

இளைஞர்களை இழந்து பரிதவிக்கும் பெற்றோர்க்கு—விசேடமாகத் தாய்மார்க்கு புறநானூற்றில் சங்ககாலப் பெண்மணிகளின் வீரத்தை, பொறுமையை, நிதானத்தைநினைவூட்டுவது மிகப் பொருத்தமாகும்.

சண்டை செய்யுமாறு தாம் பெற்ற அருமை மைந்தரை ஊக்கி அனுப்பிய வீரத் தாயார் அக்காலத்து விளங்கினர். எதிரிக்கு புறங்கொடாது மார்பிலே புண்பட்டு இறந்த மைந்தனது மேனியைக் கண்ட நிலையில், பெற்ற போதினும் பெரிய இன்பம் அடைந்தாள் ஒரு தாய்; இன்னொருவர் முதல் நாள் நடந்த போரில் கணவனை இழந்தாள். போர் ஒழியவில்லை. குடும்பத்தில் ஒரு சிறு பையனே எஞ்சி நின்றான். அன்போடு அழைத்து, தலையைச் சீவி வேலைக்கொடுத்து போருக்கு அனுப்பினாள்.

புறநானூறு எங்கே! நாம் எங்கே! என்று கிண்டல் செய்த காலம் மலையேறி விட்டது.

இதுகாறும் தலைவர்கள், அவர்களின் கட்சிகள் என்றிருந்த தமிழர் பிரச்சினையும் போராட்டமும் ஒவ்வொரு வீட்டின் வாசலில் வந்து நிற்கின்றன. வீரம்தான் தேவையென்பதல்ல; நீதி எது என்பதையும் நாம் நிதானமாக அறியும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. அரசியலில் தலைவர்கள் வழி நடத்தலாம், மகாத்மா சொன்னது போல அவர்களும் இமயம் போன்ற தவறுகளைவிடலாம்.

இன்று எங்கள் விதியில் அகில உலகம் விழிப்புடன் விசனமடைந்திருக்கும் கட்டத்தில் எவர் எந்த துரோகச் செயலில் ஈடுபட்டாலும் ஒன்றுபட்ட இனம் மீண்டும் துன்பங்களுக்கே மீளாக்காமல், உலக சமுதாயத்தின் மனச்சான்றுக்கமைய அறநெறி தவறாத அரசியல் எல்லைக்குள் நிதானமான முடிவுக்கு வழிகோல முன்வர வேண்டும்.

## தனிநாடு கோரும் எந்தக் . . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தோம். நாம் வாக்களித்ததற்கு இணங்க அவற்றை நிறைவேற்ற சட்டம் இயற்றினோம். அவை விரும்பும் அளவுக்கு இல்லாவிட்டாலும் விரைவில் அவற்றை நடைமுறைப்படுத்த சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொண்டிருந்தோம்.

''வன்செயல்கள் நடைபெறுவதற்கு சற்றுமுன்னர் நாம் கூட்டவிருந்த வட்டமேசை மாநாட்டில் மேற்கொள்ள இருந்தவை பற்றி கலந்து கொள்ளும் கட்சிகளுக்கு அறிவித்து தனிநாடுகோரிக்கையை தடைசெய்வது பற்றியும் அறிவிக்கவிருந்தோம். துர்அதிஷ்டவசமாக பல கட்சிகள் சமுகமளிக்கவில்லை. ஆனால் வன்செயல்தான் தலைதூக்கியது. இதனால் பாராளுமன்றத்தில் தனிநாடு கோரிக்கையை தடைசெய்ய சட்டம் கொண்டு வந்தோம்.

''இந்த நாட்டைக் கூறுபோடும் முயற்சியை இந்தியப் பிரதமரும் மத்தியஅரசும் ஒருபோதும் ஆதரிக்காது என்று உறுதிதெரிவித்திருக்கிறார்கள். தனிநாடு கோரும் இயக்கத்துக்கும் இந்திய அரசு ஆதரவு வழங்காது என்று உறுதியளித்திருக்கிறது.

''இந்த நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து அனுபவித்திராத சம்பவங்கள் கடந்த 3 வாரங்களில் நடந்து முடிந்துள்ளன. நூற்றுக்கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை, தொழில்களை இழந்தனர். இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் கவலை தெரிவிக்கும் அதே வேளையில் இவர்களுக்கு என்ன உதவி எம்மால் செய்யமுடியுமோ அவையனைத்தையும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

''தமிழ் சிங்கள மக்களிடையே பதட்டநிலை நிலவுவதற்கு இனவாதமும் பிரிவினைவாதமுமே காரணம். ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத மார்க்ஸிய வாதிகள் சிலர் வன்முறைகள் மூலம் அரசைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியிருந்ததை நிரூபிக்க தற்போது சாட்சியங்கள் உண்டு.

''இதுபற்றி தற்போது ஆராய்ந்துவரும் அதிகாரிகளின் அறிக்கை கிடைத்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

''ஜனநாயக முறைகளில் நம்பிக்கை வைத்துள்ள எங்களை தேர்தல்கள்மூலம் தோற்கடிக்க முடியாதவர்கள் வன்முறைமூலம் எம்மைக் கவிழ்க்கவும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் முடியும் என்றும் கருதுகின்றனர்.

''1971ல் ஆயுதம் ஏந்திதாக்குதலை நடாத்தி ஏறத்தாழ அரசை வெற்றி கண்டவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர். சிறையிலிருந்து வந்த இம் முன்னணித் தலைவர்களை நாம் பதவிக்கு வந்ததும் அவர்களுக்கு ஜனநாயகமுறையில் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் விடுதலை செய்தோம். ஜனாதிபதி தேர்தலிலும், உள்ளூராட்சி, மாவட்டசபை தேர்தல்களிலும் தோல்வி அடைந்த இவர்கள் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் பின்னர் அறிக்கையொன்றை விடுத்தார்கள். உபதேர்தலில் போட்டியிடுவதில்லை என்றும் பாராளுமன்றத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளின் மூலம் இயங்கப் போவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

''இந்த இடைத்தேர்தலில் எகலியகொடை தொகுதியில் போட்டியிட்ட நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு.வாசுதேவ நாணயக்கார தேர்தல் பிரசாரத்தின்போது குறிப்பிட்டவை பற்றி நாம் சிந்திக்கவேண்டும்.

''தாம் தெரிவுசெய்யப்பட்டால் ஜனநாயக முறையிலான தேர்தலை ஆதரிக்கப் போவதில்லை என்றும் வடபகுதி பயங்கரவாதிகளுடன் சேர்ந்து பிரச்னைகளைத்தீர்க்க முயல்வதாகவும் திரு. வாசுதேவ கூறினார். இவையெல்லாம் வன்முறைகளுக்கான காரணத்தை விளக்குகின்றன.

''மக்கள் விடுதலைமுன்னணியினரும் நவசமசமாஜிகளும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனையையும் பெற்றிருந்தனர். 6 ஆண்டுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட எம்மை அதற்கு மேல் பதவியிலிருக்க விடமாட்டோம் என்றும் இவர்கள் கூறிவந்தனர்.

''வன்முறை ஆரம்பமாகியதற்கு காரணமான 13ராணுவ வீரர்கள் பலியான நாளை நாம் கவனிக்கவேண்டும். 77 ஜூலை 23ல் நானும் எனது அமைச்சரவையும் பதவியேற்றோம். அன்று ஒரு சனிக்கிழமை ஆறு ஆண்டுகள் கழித்து அதே தினத்திலேயே 13 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. சகல இடங்களிலும் ஒரேமாதிரியான கட்சி சீருடையணிந்தவர்கள் தாக்குதலைநிகழ்த்தியுள்ளனர்.

''நாமும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியினருமே ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் நாம் இந்த நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட எம்மாலான சகலதையும்செய்வோம். வன்முறைகளுக்கு காரணமாயிருந்தவர்களுக்கு தண்டனை வழங்குவோம்'' என்றார். (கு)

## சென்னையில் சந்திரஹாசன்

(சென்னை)

இலங்கையின் பிரபல சட்டத்தரணியான திரு. எஸ். சி. சந்திரஹாசன் அண்மையில் இலங்கையில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக காந்திகாமராஜ் தேசியகாங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பி. நெடுமாறனை இங்கு சந்தித்து உரையாடினார்.

இச் சந்திப்பின்போது தமிழ் ஈழ விடுதலைமுன்னணியைச் சேர்ந்த திரு. ஈழவேந்தனும் கலந்துகொண்டார். (கு)

## இன்றைய பலன்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மும். பத்திரிகையாளரின்வேதனம் உயர்த்தப்படும்.

மகரம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையில் தடைப்படும் ஏமாற்றம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும் பூமிப்பிணக்குகளினால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும்.

கும்பம்: கண்களில் கனல் கொதிக்கும் கருத்தினில் கர்வம் தோன்றும். கொள்கையில் கோணல்குன்றிடும் குடும்பத்தில் குறுக்கு வழித்தலையீடு கவலையைத் தரும். நிதானம் வேண்டும்.

மீனம்: திடீர்த்திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும் சிலர் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் உருவாகும். இதயத்தில் இன்பத்தின் ரேகைபடரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மரண அறிவித்தல்

### திருமதி சீனிவாசகம் பரமேஸ்வரி

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் சீனிவாசகம் அல்லது ஸ்ரீநிவாசனின் அருமை மனைவி பரமேஸ்வரி காலமானார். இவர் பராசக்தி, சரவணபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யாழ்ப்பாணம் சுங்கத்திணைக்களம் கனகரத்தினத்தின் அன்பு மாமியாரும் ஆவர். ஈமக்கிரியை இல்லத்தில் நடைபெற்று சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் தகனம் நேற்றுநடைபெற்றது. 8334

## மரண அறிவித்தல்

### நா. ஸ்ரீவெங்கடேசன்

[முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்]

நா. ஸ்ரீ வெங்கடேசன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியர்) காலமானார். இவர் காலஞ்சென்ற எஸ். என். சாமி தம்பதிகளின் புதல்வரும், ருக்மணியின் அன்புக் கணவரும், கோபிநாத், பிரேம்நாத், பவானி ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவானந்தம் (ஓய்வு பெற்ற மத்திய வங்கி உத்தியோகத்தர்), இராசநாயகம் (சட்டத்தரணி), ஸ்ரீ ரங்கநாதன் (வட மாகாண ஆசிரியர் சங்க சகாய நிதி), ஸ்ரீவிவேகானந்தன் (யா. ப. நோ. கூ. ச. களஞ்சியப் பொறுப்பாளர்), திருமதி ஜெகதீஸ்வரி விஸ்வநாதன் ஆகியோரின் சகோதரரும், ந. விஸ்வநாதனின் (கெமிக்கல் இன்டஸ்றீஸ் காசாளர்) மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 22, பெருமாள் கோவில் தெற்கு ஒழுங்கை இல்லத்திலிருந்து 25-ம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 8347

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி கந்தையா

இலக்கம் 15, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி பாக்கியலட்சுமி கந்தையா 20-8-83-ல் காலமானார். இவர் புங்குடுதீவைச் சேர்ந்த, யாழ். மாநகர சபை ஆயுர்வேத வைத்திய சாலையின் ஓய்வுபெற்ற பிரதம வைத்தியர் A. A. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பலாங்கொடை செல்லப்பா - சீனிவாசகம்- அமராவதி தம்பதிகளின் அன்பு மகளும், தங்கராசாவின் அன்புச் சகோதரியும், பராக்கிரமசிங்கம் (மகாராஜா நிறுவனம்), இந்திராதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-8-83 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது வந்திருந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றி. இவ்வறிவித்தலை நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வைத்தியக் கலாநிதி A.A. கந்தையாவும்,
பிள்ளைகளும். 8341

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.